ஊடக அறிவித்தல்

# தேர்தல் ஆணைக்குழு

2020.12.31 ஆந் திகதி கூடிய தேர்தல் ஆணைக்குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

- புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் 2021 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படுவதோடு, அதற்கவசியமான அளவுகோள்களைத் தயாரிப்பதற்காக ஒரு குழுவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அக்குழுவின் சிபார்சுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் குறித்த அளவுகோல்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளின் தகவலுக்காக வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தப்படும்.

- நாட்டில் பரவியுள்ள கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் கடந்த பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க நேரிட்டதன் காரணமாக அத்தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட முன்வந்த அரசாங்க அலுவலர்களுக்கு முழு தேர்தல் காலப்பகுதியிலும் சம்பளமற்றவர்களாக இருப்பதற்கு நேரிட்டது, அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக இருந்ததன் காரணமாகவும், அவர்களுக்கு அதன்மூலம் பாதக தாக்கமொன்று ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையாலும் அக்காலப்பகுதிக்கு சம்பளங்களைக் கொடுப்பனவுசெய்வதற்கு அவசியமான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆவண செய்யுமாறு அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவித்தல்.

- ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஆணைக்குழுவில் காணப்படும் செயற்பொறுப்பையும் அதற்குரிய பணிகளையும் அமுல்படுத்துவது தொடர்பில் அந்தந்தப் பணிகளுக்குரிய பொறுப்பையும் மேற்பார்வையையும் ஒப்படைத்தல்.

- ஆணைக்குழுவின் செயற்பொறுப்பு பற்றிய பரந்ததோர் ஆய்வை மேற்கொள்ளலும், அதன்படி முறைவலுப்படுத்துவதற்காக அது பற்றிய நிபுணத்துவ அறிவுள்ள ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து ஒரு பூரண அறிக்கையை குறுகிய ஒரு காலத்துள் பெற்றுக்கொள்ளலும் அதற்கமைய அவசியமான கட்டமைப்பு சார்ந்த திருத்தங்களை மேற்கொள்ளலும்.

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களின் கூட்டமொன்றை 2021.01.11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடாத்துதல்.

- தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அலுவலர்களின் கூட்டமொன்றை 2021.01.11 ஆந் திகதி பி.ப. 02.30 மணிக்கு நடாத்துதல்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய
2020.12.31